2018 மே 31]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

தாய்–சேய் நல மையம்

***2284—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, அசூரில் உள்ள தாய்–சேய் நல மையம் முழு நேரமும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவெறும்பூர் தொகுதி, அசூரில் உள்ள தாய்–சேய் நல விடுதி, health sub centre, *அதாவது துணை சுகாதார நிலையம் ஆகும். அந்தத் துணை சுகாதார நிலையத்திலே பொது சுகாதாரத் துறையின்கீழ் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்கள் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட பயணத் திட்ட அட்டவணையின்படி தொடர்ந்து தங்கள் பணியை செவ்வனே ஆற்றி வருகிறார்கள். ஆக, அந்த வகையிலே கிராம சுகாதார செவிலியர்கள் தொடர்ந்து பணியிலே அந்தப் பயணத் திட்டத்தின்படி, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், ஒவ்வொரு நாளும் அந்த அட்டவணைப்படி பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், மேற்கொண்டு அந்த தாய்–சேய் நல விடுதி முழு நேரமாக செயல்படக்கூடிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசவ காலத்தில் தாய்—சேய் இறப்பு விகிதம் தமிழ்நாட்டில்தான் மற்ற மாநிலங்களைவிடக் குறைவாக இருக்கிறது. அது நம்முடைய அரசுக்கு, குறிப்பாக மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, பெருமை சேர்க்கக்கூடியதாக இருக்கிறது. இதற்கு மிக முக்கியக் காரணம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய தமிழகத்தில்தான் கிராமங்கள்தோறும், இன்னும் ஒரு படி மேலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், கிராமங்களைத் தாண்டி, குக்கிராமங்களுக்குக்கூட இந்தக் கிராம சுகாதார சேவை இன்றைக்கு விரிவுபடுத்தப்பட்டு இருக்கிறது.*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வாறு அதிக ஈடுபாட்டோடு அக்கறை கொண்டு இந்தத் துறையை வழிநடத்தினார்களோ, அதேபோல மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே இன்றைக்கு சிறப்பான ஆட்சியை நடத்திவரும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் இந்தத் துறைக்கு முக்கியத்துவம் தருகிறார். அகில இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இந்திய அளவில் நிர்ணயிக்கப்படும் சுகாதாரக் குறியீடுகளை எட்டுகிற அளவிற்கு சுகாதாரத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எல்லா வகையிலும், எல்லா நிலையிலும் பாராட்டு பெறுகிற வகையிலே இத்துறை விளங்குகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிய விரும்புவது என்னவென்றால், கிராமப்புற சுகாதார சேவை நல்லமுறையிலே நடைபெற்று வருகிற இந்தக் காலக்கட்டத்தில் நான் சொன்னதைப்போல கடைக்கோடியில் உள்ள குக்கிராமங்களுக்கும் இதை விரிவுபடுத்தி அதன் மூலமாக அந்தச் சேவை அனைத்து மக்களுக்கும் கிடைக்கிற வகையிலே அரசிடம் ஏதாவது சிறப்புத் திட்டம் இருக்கிறதா? அத்தகைய திட்டம் ஏதும் இருந்தால், அதனை விரைவாக நிறைவேற்றுவதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறதா என்பதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் அவர்கள் நல்லதொரு சிறப்பான கேள்வியை இந்த மன்றத்திலே*

2018 மே 31]

முன்வைத்திருக்கிறார்கள். இந்திய அளவிலே சுகாதாரக் குறியீடுகளில் நம்முடைய தமிழகம் தொடர்ந்து முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், ஒரு முன்னோடி மாநிலமாக, role model State ஆக விளங்கி வருகிறது என்பது அனைவரும் அறிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, வளர்ச்சி என்பது, தொடர்ந்து வளர்ச்சி இருந்தாலும், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஓராண்டில் மட்டும், மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குழந்தை இறப்பு விகிதத்தை 10 சதவிகிதமாகக் குறைத்து, 19 என்ற புள்ளியிலிருந்து 17 புள்ளி என்கிற இலக்கை இந்த ஓராண்டிலே நாம் அடைந்ததை மத்திய அரசும், உலக சுகாதார நிறுவனமும் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் கிராம சுகாதார சேவையைப் பற்றி ஒரு கேள்வியை முன்வைத்திருக்கிறார். இந்திய அளவிலே rural health service, அதாவது, கிராம சுகாதார சேவைகளில் மிக வலுவான கட்டமைப்பு கொண்ட மாநிலம் தமிழ்நாடு ஆகும். ஏனென்றுசொன்னால், 8,706 sub centres, துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்தத் துணை சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கிராம சுகாதார செவிலியர் அங்கேயே தங்கியிருந்து சேவை தேவைப்படுகின்ற இடங்களுக்கு, நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, அந்த அட்டவணைப்படி சென்று வருவார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10–40

இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு புதிய சிந்தனையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் 3 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, Universal coverage— அனைவருக்கும் நலவாழ்வு என்ற அடிப்படையில், ஏற்கெனவே ஒரு சுகாதார செவிலியர் இருக்கின்ற இடங்களில் மேலும் 2 சுகாதார செவிலியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனை பரீட்சார்த்த முறையில் பார்த்தபோது, அதில் நமக்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்தது. பெரம்பலூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, சூளுர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் மிகப் பெரிய வெற்றி கிடைத்ததன் அடிப்படையில், 42 மாவட்டங்களில் 42 ஊராட்சி

ஒன்றியங்களில் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற 985 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு சுகாதார செவிலியர் இருக்கக்கூடிய இடங்களில், இரண்டு சுகாதார செவிலியர்களை இந்த ஆண்டு நாம் நியமிக்கின்றோம். இந்த நிகழ்வு என்பது, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் நடைபெறாத நிகழ்வு. அவ்வாறு நியமித்ததற்குப் பின்னர், ஒரு கிராம சுகாதார செவிலியர் அங்கேயே தங்கியிருந்து அனைத்து சேவையையும் செய்வார்கள். இன்னொரு கிராம சுகாதார செவிலியர் அங்கேயே field visit செய்து, பிற பணிகளைச் செய்வார். அப்பொழுது 100% கிராம சுகாதார சேவையை நிலை நிறுத்துகின்ற மாநிலம் நம்முடைய தமிழ்நாடு என்ற இலக்கை, அதுவும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் நமது தமிழ்நாடு என்ற இலக்கை அடைய இந்த சிறப்புத் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கு அன்போடு, பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நூறாண்டு காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்த காவேரி பிரச்சினையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியிலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த சட்ட போராட்டங்களுக்கு மத்தியில் தமிழ்நாட்டிற்கு சாதகமான நல்ல தீர்ப்பைப் பெற்றுத் தந்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அபோல, 22 ஆண்டுகளாக தென் மாவட்ட மக்களினுடைய நிம்மதியைக் கெடுத்துக்கொண்டிருந்த ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக மூடப்படும் என்றும், அதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட நிலங்கள் திரும்பப் பெறப்படும் என்ற சிறப்பான ஆணையை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 மே 31]

எனது சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில், வாடிப்பட்டி ஒன்றியத்தில் இரும்பாடி பாலகிருஷ்ணாபுரம் என்ற கிராமம் உள்ளது. அந்த கிராமத்தைச் சுற்றி 15-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே, ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல், அந்தப் பகுதியிலிருக்கின்ற 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் சோழவந்தான் அல்லது வாடிப்பட்டிக்கு வந்துதான் மருத்துவ சேவை பெறக்கூடிய நிலை இருக்கின்றது. மருத்துவத் துறையை மிகச் சிறந்த முறையில் செயல்பட வைத்து இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழக் காரணமாக இருக்கக்கூடிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இக்கோரிக்கையினைக் கருணையோடு பரிசீலித்து, இரும்பாடி பாலகிருஷ்ணாபுரத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையிலான 7 ஆண்டுகளில் மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாக 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இரும்பாடி பாலகிருஷ்ணாபுரம் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு துறைரீதியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த ஆய்வின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருங்காலத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம் என்று அறிவித்த சிங்க நிகர் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

[2018 மே 31

சுமார் 200 கிராம மக்கள் அன்றாடம் வந்து செல்லும் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்கென 40 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். அதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நடவடிக்கையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு உண்டான ஆயத்தப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் அவர்களுக்கு நல்ல செய்தி வரும் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவைர் அவர்களே, தங்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் பணிவோடு வணங்குகிறேன்.*

எங்களுடைய நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கின்ற நாகப்பட்டினம் மாவட்ட தலைமை மருத்துவமனை என்பது கடற்கரைப் பகுதியைச் சார்ந்த மாவட்ட தலைமை மருத்துவமனையாக இருக்கிறது. மாவட்ட தலைமை மருத்துவமனையிலே 74 மருத்துவர்கள் இருக்க வேண்டிய நிலையில் தற்போது 24 மருத்துவர்கள் மட்டுமே அங்கே பணி புரிகிறார்கள். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து எங்களுடைய மாவட்டமான நாகப்பட்டினத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாகப் பணிவோடு வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

2018 மே 31]

எங்களுடைய நாகப்பட்டினம் மாவட்டத்தை பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள காரைக்கால் என்ற பகுதி பிரிக்கின்ற காரணத்தினாலே, நாங்கள் மாவட்ட தலைமை மருத்துவமனையில் மருத்துவ சேவையைப் பெறுவதற்கு ஏறத்தாழ 30 கிலோமீட்டர் கடந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லவேண்டிய நிலை இருப்பதாலும், எங்களுடைய மயிலாடுதுறை தலைமை மருத்துவமனைக்கு முடிந்த அளவிற்கு சிறப்பான பணிகளை, சிறப்பான சேவைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால், உயர் சிகிச்சை பெறுவதற்கு நாங்கள் காரைக்கால் பகுதியைக் கடந்து, 30 கிலோமீட்டர் கடந்து நாகப்பட்டினம் செல்ல வேண்டியிருப்பதால், தயவுகூர்ந்து அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான எங்களுடைய மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரையிலும் ஆண்டுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே, தொடர்ந்து மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த ஆய்வுக் கூட்டத்திலேகூட, மத்திய அரசு சார்பிலே, பாராளுமன்றத் தொகுதிக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையிலே, மருத்துவக் கல்லூரிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்று பேசப்பட்டது. அந்த அடிப்படையிலே நாங்கள் மத்திய அரசிடம் கூடுதலாக மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையிலே, வரும் காலத்திலே, மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களிலே முன்னுரிமை அடிப்படையிலே படிப்படியாக மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. தொடர்ந்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினராகிய நீங்களும் கொடுக்கின்ற கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, கடந்த ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு MRI scan, மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு C.T. Scan போன்றவை வழங்கப்பட்டன. இதுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் மருத்துவமனையை மருத்துவக் கல்லூரிக்கு இணையான மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியதோடு, பல்வேறு புதிய அதிநவீன உபகரணங்களும் வழங்கப்பட்டன. கூடுதலாக மருத்துவர்களும், சிறப்பு மருத்துவர்களும் தங்கள் மாவட்டத்திற்கு சிறப்பு கவனத்தின் அடிப்படையிலே நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், 7½ கோடி மக்களின் இதயங்களில் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்களின் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை உடனுக்குடன் மக்களிடம் எடுத்துச்சென்று, சிறப்பான முறையில் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். எங்கள் மாவட்டத்தின் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், திராவிட இயக்கத்தின் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் ஸ்ரீபெரும்புதூர் அண்ணா பொது மருத்துவமனை இயங்கிவருகிறது. அந்த மருத்துவமனைக்கு C.T. Scan வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த மருத்துவமனைக்கு மக்கள் செல்ல வசதியாக பெங்களூர் முதல் ஸ்ரீபெரும்புதூர் வரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு

செய்து, சாலை அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு C.T. Scan வழங்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் C.T. Scan வசதியெல்லாம் எட்டாக் கனியாக இருந்த நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு C.T. Scan, M.R.I. Scan போன்ற மிகப் பெரிய அதிநவீன உபகரணங்களை உள்ளங்கை நெல்லிக்கனியாக மாற்றிக் காட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இந்த ஓர் ஆண்டிலே மட்டும் இதுவரையில் இல்லாத அளவில் மக்கள் நல்வாழ்வுத் துறையிலே ஒரே நேரத்தில் 44 அதி நவீன C.T. Scan கருவிகள், 18 M.R.I. Scan கருவிகள், Linear Accelerator என்று சொல்லக்கூடிய 6 LINAC equipments, இருதய சிறப்பு சிகிச்சை அளிப்பதற்காக 6 கோடி ரூபாய் மதிப்புள்ள 11 Cath Lab எல்லாம் பல இடங்களில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அவற்றைத் திறந்து வைத்திருக்கின்றார்கள்.

முற்பகல் 10–50

உறுப்பினர் குறிப்பிடுகின்ற ஸ்ரீபெரும்புதூரில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப வருங்காலத்தில் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.